

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தை காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து விழுப்புரம் அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ கலந்து கொண்டு துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் ஷேக் அப்துல் ரகுமான், டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



கடலூர் மேற்கு மாவட்ட ஒன்றிய,நகர,பேரூர், இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமை தாங்கி பேசினார். சபா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ., மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### புதுப்பிக்கத் தக்க எரிசக்தி வளர்ச்சியை தமிழ்நாட்டில் ஊக்கப்படுத்த,

# பசுமை வழித்தடத் திட்டம் முறையாகப் பின்பற்றப்படுகிறதா?

## மக்களவையில் — எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஆக.5-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் மக்களவையில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சியை, தமிழ் நாட்டில் ஊக்கப்படுத்த பசுமை வழித்தட திட்டம் முறையாக செயல்படுத்தப்படுகிறதா? என்றும், அதற்கான கட்டமைப்புகள் முறையாக பராமரிக்கபடுகிறதா? என்றும், இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளனவா? என்றும் தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் எரிசக்தி முறையாக தேசிய பகிர்மானத்துடன் இணைக்கப்படுகிறதா? என்றும் ஒன்றிய அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை இணையமைச்சர் சிரிபத் யஸ்ஸோ நாயக் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

தமிழ்நாடு அரசின் கட்டமைப்புகள் அனைத்தும் மாதாந்திர அறிக்கைகளை, ஒன்றிய மின்சார ஆணையத்திற்கு ஒவ்வொரு மாதமும் அளித்து வருகின்றன என்றும், அதன் மூலம் பசுமை வழித் திட்டம் உள்பட அனைத்து கட்டமைப்புகளையும், ஒன்றிய அரசின் புதுப்பிக்கதக்க எரிசக்தி துறை கண்காணித்து வருகிறது. திட்டங்கள் முறையாக பின்பற்றப் படுகிறதா என்று திட்ட மதிப்பிட்டு குழு கண்காணித்து வருகிறது. 624 சர்க்யூட் கிலோ மீட்டர் மின்கடத்தும் கோபுரங்களும், 2200 மெ/வா திறன் கொண்ட துணை நிலையங்களும் செயல்படும் வகையில் 4000 மெகா வாட் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி தயாரிக்க ரூபாய் 719 கோடி செலவில் பசுமை வழித்தட திட்டம் தமிழ் நாட்டில் நிறைவேற்றப் படஉள்ளது.

மேலும் 10570 மெகா வாட் சூரிய சக்தி உள்பட, கடந்த ஜூன் மாத நிலவரப்படி, தமிழ் நாட்டில் 25749 மெகா வாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. 756 மெ/வா மின் கோபுரங்கள் மற்றும் 400 மெ/வா மின் கடத்தும் கோபுரங்களின் உதவியால் தேசிய மின்பகிர்மானத்துடன், தமிழ் நாட்டில் உற்பத்தி முறையாக பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### கடந்த 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட

# புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான திட்டங்களின் விவரங்கள் என்ன?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 5–

நாடு முழுவதும் கடந்த 5 ஆண்டுகளில் 84,112.89 மெகாவாட் திறனுக்கு புதுப்பிக்கப்பட்ட ஆற்றலுக்கான திட்டங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும், அதில் தமிழ்நாட்டுக்கு மட்டும் 8,652.52 மெகாவாட் நிறுவப்பட்டுள்ளதாக, மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. கிரிராஜன் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு, ஒன்றிய அரசின் இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தின் முன்மொழிவுகள் மற்றும் செயல்படுத்துதல் குறித்து நாடாளுமன்ற மாநிலங்களவை மழைகால கூட்டத் தொடரில் பேசிய திமுக எம்.பி. இரா.கிரிராஜன் ஒன்றிய அரசிடம் கேள்வி எழுப்பினார். அதில், மத்திய, மாநில அரசுகள் மற்றும் தனியார் நிறுவனங்களின் கட்டிடங்களில் கடந்த ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்பட்ட புதுப்பிக்கத் தக்க ஆற்றல் தொடர்பான திட்டங்களின் விவரங்கள் என்ன? அவற்றை கட்டாயமாக்குவதற்காக ஒப்புதல் அளிக்க என்ன திட்டங்கள் உள்ளது? சூரிய மின் உற்பத்தி மற்றும் காற்றாலை தொழில்நுட்ப திட்டத்திற்கான செலவின் தாக்கத்தை கண்டறிய என்ன ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? என்ற கேள்விகளை எழுப்பி இருந்தார்.

அதற்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் இணை அமைச்சர் ஸ்ரீபாத் எஸ்ஸோ நாயக் அளித்துள்ள பதிலில், மின் வினியோக நிறுவனங்களை உள்ளடக்கிய DISCOM அறிக்கையின்படி குடியிருப்பு, அரசு, வணிகம் மற்றும் தொழில்துறை நிறுவன, சமூக மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்ற அனைத்துத் துறை கட்டடங்களில் இணைக்கப்பட்ட கூரை சூரிய அமைப்புகளின் மூலம் 15,206.68 மெகாவாட் திறன் அளவிற்கு அமைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

சூரிய ஒளி திட்டத்திற்கான பேனல்களின் செயல்திறன் குறித்து ஒளிமின்னழுத்த ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான தேசிய மையம் (NCPRE), பாம்பே ஐஐடி ஆகியவை ஆய்வு நடத்தி உள்ளதாகவும், சான்றளிக்கப்பட்ட காற்றாலை விசையாழிகளை, 'மாடல்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் திருத்தப் பட்ட பட்டியல்' (RLMM) என்ற தலைப்பில் பட்டியலிடுவதற்கான நடைமுறையை புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் அமைத்துள்ளதாகவும் இணை அமைச்சர் பதில் தெரிவித்துள்ளார்.

புனல் மின் திட்டங்கள் நீங்கலாக கடந்த ஐந்து ஆண்டுகளில் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் தொடர்பான விவரங்களும் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 202021ல் 7548.09 மெகாவாட், 202122ல் 14081.99 மெகாவாட், 202223ல் 15274.45 மெகாவாட், 202324ல் 18484.68 மெகாவாட், 202425ல் 28723.68 மெகாவாட் என நாடு முழுவதும் 84,112.89 மெகாவாட் திறனுக்கு புதுப்பிக்கப் பட்ட ஆற்றலுக்கான திட்டங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும், அதில் தமிழ்நாட்டுக்கு மட்டுமான 8,652.52 மெகாவாட் திட்டங்களும் அடங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

### சேதமடைந்த

# இரயில்வே பாலங்களைப் புனரமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் — மரு.கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி!



புதுடெல்லி, ஆக.5-

நாடு முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள சிதிலமடையும் நிலையிலுள்ள பாலங்களை புனரமைக்க கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடு முழுவதும் எத்தனை இரயில்வே பாலங்கள் இடிந்து விழுந்துள்ளன?

நிதி ஒதுக்கீடு செய்வதில் தொய்வு மற்றும் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை துரிதமாக முடிக்காததால் பாலங்கள் இடிந்து விழும் நிலை ஏற்பட்டுள்ளதா? அதுசார்ந்த விவரங்களை வெளியீடுக.

நாடு முழுவதும் பழைய இரயில்வே பாலங்களை சீரமைக்க ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன? என்று மாநிலங்களவையில் மரு. கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய இரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்துள்ள பதில் வருமாறு :-

01.04.2025ஆம் தேதி வரை ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 845 இரயில்வே பாலங்கள் இந்திய ரயில்வே கட்டமைப்பில் பல்வேறு காலங்க ளில் உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

இவற்றை கண்காணிக்க பிரத்யேக கண்காணிப்பு நெறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு இருமுறை, அதாவது பருவ மழைக்கு முன்பு மற்றும் பின்பு என இரண்டு கட்டங்களாக ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

சில குறிப்பிட்ட இரயில்வே பாலங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அவற்றின் ஸ்திரத்தன்மைக்கேற்ப சீரமைக்கப்பட்டு வலுப்படுத்துவதற்கான பணிகள் காலத்துக் கேற்றாற்போல மேற்கொள்ளப்படுகிறது.

மண்டல வாரியாகவும் இரயில்வே பாலங்கள் பற்றிய தரவுகள் கையாளப்படுகின்றன. தமிழ்நாடு தெற்கு மற்றும் தென்மேற்கு பகுதிகளாக தென்மண்டல இரயில்வே நிர்வாகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் உள்ளது.

2014 ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டுவரையில் 15,335 இரயில்வே பாலங்கள் புனரமைக்கவோ அல்லது புதுப்பிக்கப்பட்டோ உள்ளன. இவற்றில் 2,165 பாலங்கள் தமிழ்நாட்டிற்கு உட்பட்டவை.

01.04.2025 வரை 12,877 இரயில்வே மேம்பாலங்களில் புனரமைப்பு அல்லது புதுப்பிப்பதற்கான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 1,471 இரயில்வே பாலங்கள் தமிழ்நாட்டிற்கு உட்பட்டவை.

சாலை வசதிகள், திட்டங்களுக்கு வழங்கப்படும் ஒப்புதல் சார்ந்த நெறிமுறைகள், பருவ நிலை, தளவாடங்கள் கையிருப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இதுபோன்ற இரயில்வே பாலங்கள் புனரமைப்பு பணிகளின் வேகம் மாறுபடுகிறது.

இவ்வாறு ஒன்றிய இரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதில் அளித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் பொது சுகாதார வசதிகளில் அத்தியாவசிய மருந்துகள் தடையின்றி கிடைக்க – சரியான நேரத்தில்

# நோயறிதல் சேவைகளை உறுதி செய்ய ஒன்றிய அரசிடம் கண்காணிப்பு வழிமுறை உள்ளதா?

## மக்களவையில் — க.செல்வம் கேள்வி!



புதுடெல்லி, ஆக.5-

காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் சுகாதாரம் மற்றும் குடும்ப அமைச்சகத்திற்கு எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

(அ) தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் நாடு முழுவதும் இலவச மருத்துவச் சேவை முயற்சி மற்றும் இலவச நோயறிதல் சேவை முயற்சியை அரசு செயல்படுத்துகிறதா. அப்படியானால், அதன் விவரங்கள், தமிழ்நாடு உட்பட மாநில வாரியாக.

(ஆ) இந்த முயற்சிகளின் கீழ் பல்வேறு நிலைகளில் பொது சுகாதார வசதிகளில் இலவசமாக வழங்க கட்டாயப்படுத்தப்பட்ட மருந்துகள் மற்றும் நோயறிதல் சோதனைகளின் எண்ணிக்கை. அத்தியாவசிய

மாவட்ட (இ) துணை சுகாதார மையங்கள் (SHCs), ஆரம்ப சுகாதார மையங்கள் (PHCs), சமூக சுகாதார மையங்கள் (CHCs), மருத்துவமனைகள் (SDHs) மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் இந்த முயற்சிகளை தமிழ்நாட்டில் எந்த அளவிற்கு செயல்படுத்தியுள்ளது.

(ஈ) தமிழ்நாட்டில் உள்ள பொது சுகாதார வசதிகளில் அத்தியாவசிய மருந்துகள் தடையின்றி கிடைப்பதையும், சரியான நேரத்தில் நோயறிதல் சேவைகளை வழங்குவதையும் உறுதி செய்வதற்கு மத்திய அரசிடம் ஏதேனும் கண்காணிப்பு வழிமுறை உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்.

(உ) இலவச மருந்துகள் மற்றும் நோயறிதல்களை மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் நோயாளிகளின் பாக்கெட் செலவை மேலும் குறைக்க மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

ஒன்றிய அமைச்சரின் பதில்கள் வருமாறு:-

(அ) முதல் (இ)க்கு தேசிய சுகாதார இயக்கதின் கீழ், தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலகள்/யூனியன் பிரதேசங்களுக்கும் பொது சுகாதார வசதிகளில் இலவச அத்தியாவசிய மருந்துகள் மற்றும் இலவச அத்தியாவசிய நோயறிதல்களை வழங்குவதற்காக நிதி உதவி வழங்கப்டுகிறது. மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் தங்கள் திட்ட செயல்படுத்தல் திட்டங்களில் (PIPs) முன்வைக்கும் தேவைகளின் அடிப்படையில் இலவச மருந்துகள் சேவை முன்முயற்சியின் கீழ், அத்தியாவசிய மருந்துகளை பரவலாக அணுகுவதை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு உட்பட நாட்டில் பொது சுகாதார வசதிகளில் வசதி வாரியான அத்தியாவசிய மருந்துகள் பட்டியலை (EDL) கிடைக்கச் செய்ய அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் இலவச நோயறிதல் சேவை முயற்சி (FDSI) திட்டத்தை ஆதரிக்கிறது. இந்த திட்டம், சமூகத்திற்கு நெருக்கமான, அணுகக்கூடிய மற்றும் மலிவு விலையில் நோயியல் மற்றும் கதிரியக்க நோயறிதல் சேவைகளை வழங்கு நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

இது கையிலிருந்து செலவழிக்கும் செலவை (OOPE) குறைக்கிறது. தமிழ்நாடு உட்பட நாட்டில் உள்ள சுகாதார நிலையங்களில் பரிந்துரைக்கப்படும் மருந்து மற்றும் நோயறிதல் சேவைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மாநிலங்கள் கூடுதலாகச் சேர்க்க நெகிழ்வுத்தன்மையைக் கொண்டுள்ளன.

தமிழ்நாடு மாநில அரசு அறிவித்தபடி, PHC, CHC, SDH மற்றும் DHQ மாவட்டத்தில் மொத்தம் 482 அத்தியாவசிய மருந்துகளும், DH மற்றும் மூன்றாம் நிலை மட்டத்தில் 484 சிறப்பு மருந்துகளும் வழங்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் DHல் மொத்தம் 134 சோதனைகள், SDHல் 111, CHCல் 97, PHCயில் 63 மற்றும் துணை சுகாதார மையங்களில் 14 சோதனைகள் வழங்கப்படுகின்றன.

கொள்முதல், விநியோகச் சங்கிலி மற்றும் சரக்கு மேலாண்மை ஆகியவற்றில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்ய அமைச்சகம் பல அடுக்கு கண்காணிப்பு அணுகுமுறையை ஏற்றுக்கொண்டுள்ளது. பல மாநிலகள் மருந்துகளின் கொள்முதல், நுகர்வு மற்றும் நிரப்புதலைக் கண்காணிக்க மருந்துகள் மற்றும் தடுப்பூசி விநியோக மோலாண்மை அமைப்பு (DVDMS) போன்ற டிஜிட்டல் தளங்களை ஏற்றுக்கொண்டுள்ளன. திறந்த தரவு கிட் (ODK) கருவி மூலம் அத்தியாவசிய மருந்துகள் கிடைக்கும் தன்மை மற்றும் நோயறிதல் உள்ளிட்ட சுகாதார விதிகளின் பல்வேறு அளவுருக்கள் மாநிலங்களால் மதிப்பிடுகின்றன. மத்திய அரசு மற்றும் மாநில அரசின் மூத்த அதிகாரிகளின் கள வருகைகள், இந்த சேவைகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாட்டையும் கண்காணிக்கின்றன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

### வில்லியனூர் தொகுதியில்

# குடும்ப அட்டைதாரர்கள் ஆன்-லைன் மூலம் சரிபார்க்கும் சிறப்பு முகாம்!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, ஆக. 5–

புதுச்சேரி அரசின் குடிமைப் பொருள் வழங்கல் துறை அறிவுறுத்தலின்படி, வில்லியனூர் தொகுதியில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களையும் ஆன்–லைன் மூலம் (eKYC) சரிபார்க்க பொது சேவை மையத்தை அணுக அரசு அறிவுறுத்தி இருந்தது.

அதிக குடும்ப உறுப்பினர்களை கொண்ட வில்லியனூர் தொகுதி மக்களுக்கு சிரமமின்றி குடும்ப உறுப்பினர்களின் விவரங்களை ஆன்–லைன் மூலம் சரிபார்ப்பதற்காக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இரா. சிவா அவர்கள் இரண்டு நாள் சிறப்பு முகாமிற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அதன்படி, வில்லியனூர் திருக்காமீஸ்வரர் எதிரில் உள்ள வாணியர் திருமண நிலையத்தில் 2 நாட்கள் நடைபெறும் சிறப்பு முகாமை நேற்று காலை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார். முகாமில் வில்லியனூர் தொகுதியைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள் பங்கேற்று பயன் பெற்று வருகின்றனர்.

இதில், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, செல்வநாதன், தர்மராஜ், வர்த்தக அணி அமைப்பாளர் ராமன், விவசாய அணி அமைப்பாளர் குலசேகரன், சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஹாலித், விவசாய அணி துணை அமைப்பாளர் கோபி, ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் காலி, தொகுதி செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன். கிளைக் கழக நிர்வாகிகள் ராஜி, கலியபெருமாள், மிலிட்டரி முருகன், கார்த்திகேயன், கமால் பாஷா, காசிநாதன், கோவிந்தராஜ், முருகேசன், தர்ஷனா, பாலகுரு, ராஜேந்திரன், ரகு, சக்தி, முத்து, சந்தோஷ், ராம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நேற்று முன்தினம் (02.08.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்கிற அற்புதமான திட்டத்தினை காணொளிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார், அதனைத் தொடர்ந்து கள்ளக்குறிச்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட தொடக்க விழா நிகழ்ச்சியில் உணவுப் பாதுகாப்புத் துறையின் சார்பில் உணவுத் தொழில் புரிபவர்களுக்கான பயிற்சி சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் வழங்கினார்கள், நிகழ்வில் கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் புவனேஸ்வரி பெருமாள், நகர மன்ற தலைவர் ஆர்.சுப்ராயலு ஆகியோர் உடன் உள்ளார்கள்.



புதுச்சேரி அரசின் குடிமைப் பொருள் வழங்கல் துறை அறிவுறுத்தலின்படி, வில்லியனூர் தொகுதியில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களையும் ஆன்–லைன் மூலம் (EKYC) சரிபார்க்க பொது சேவை மையத்தை அணுக அரசு அறிவுறுத்தியதின்படி அதிக குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட வில்லியனூர் தொகுதி மக்களுக்கு சிரமமின்றி குடும்ப உறுப்பினர்களின் விவரங்களை ஆன்–லைன் மூலம் சரிபார்ப்பதற்காக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இரா. சிவா, இரண்டு நாள் சிறப்பு முகாமிற்கு ஏற்பாடு செய்திருந்தார்.